# BOOK – 1 – Tamil Composition (Paper 1)

## பொருளடக்கம் - கட்டுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | **தொகுதி 1** | |
| 1 | உன்னைக் கவர்ந்த ஆசிரியர் ஒருவரைப் பற்றியும், அவர் உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக. | 7 - 9 |
| 2 | சிங்கப்பூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழ்மொழி விழாக்கள் உனது மொழியை மேம்படுத்திக் கொள்ள எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்கி எழுதவும். | 10 - 12 |
| 3 | இக்காலச் சிங்கப்பூரர்களுள் பெரும்பாலானோர் தன்னலமிக்கவர்களாக இருக்கிறார்கள். இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்? | 13 - 14 |
| | **தொகுதி 2** | |
| 4 | பெற்றோர்களே பிள்ளைகளின் உயர்வு தாழ்வுக்குக் காரணமாவர் - இது குறித்து உமது கருத்தை எழுதுக. | 15 - 17 |
| 5 | அண்மையில் நடந்த இயற்கைப் பேரிடர்க்காக உன் பள்ளி ஏற்பாடு செய்திருந்த நிதி திரட்டும் நிகழ்ச்சியில் நீ கலந்து கொண்டதன் மூலம் உனக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரிக்கவும். | 18 - 20 |
| 6 | வாழ்க்கையில் எந்தப் பிடிப்பும் இல்லாமல் உள்ள உன் நண்பனுக்கு நீ செய்த உதவி. | 21 - 22 |
| | **தொகுதி 3** | |


**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

| | | |
|---|---|---|
| 7 | ஒரு மாணவர் வாழ்க்கையில் வெற்றியடையத் தேவையான பண்புகள் யாவை என்பதை விளக்கி எழுதுக. | 23 - 25 |
| 8 | இக்கால தகவல் தொழில்நுட்பத்தால் ஏற்படும் நன்மை, தீமைகளை விளக்கி எழுதுக. | 26 - 28 |
| 9 | தொலைக்காட்சியில் நீ விரும்பிப் பார்த்த ஒரு நிகழ்ச்சியும், அது உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக. | 29 - 31 |
| | **தொகுதி 4** | |
| 10 | உமது பள்ளி ஏற்பாடு செய்த விடுமுறை முகாமில் கலந்துகொண்டு நீவிர் அடைந்த பயன்களையும், அதன்மூலம் நீ எவ்வாறு உம்மை மேம்படுத்திக் கொண்டாய் என்பதையும் விளக்கி எழுதுக. | 32 - 34 |
| 11 | பள்ளியின் பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவற்றை மாணவர்கள் பாதுகாப்பதற்கான வழிவகைகளையும் விளக்கி எழுதுக. | 35 - 37 |
| 12 | இக்கால மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் உள்ள பிணைப்பை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையும், அதனால் ஏற்படும் பயன்களையும் விவரித்து எழுதுக. | 38 - 39 |
| | **தொகுதி 5** | |
| 13 | நீ கண்டு மகிழ்ந்த ஒரு திரைப்படத்தைப் பற்றியும், அது உனது நினைவில் நிற்பதற்கான காரணத்தையும் விவரித்து எழுதுக. | 40 - 42 |
| 14 | நீ முடிவெடுக்கச் சிரமப்பட்ட ஒரு பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட்டது என்றும், அதற்காக நீ மேற்கொண்ட செயல்களையும், சந்தித்த சவால்களையும் விவரித்து எழுதுக. | 43 - 45 |
| 15 | பள்ளிகள் ஏற்பாடு செய்யும் வெளிநாட்டுக் கற்றல் பயணங்கள் ஒரு மாணவனின் முழுமைக் கல்விக்குத் துணைபுரிகின்றன - கருத்துரைக்க. | 46 - 47 |
| | **தொகுதி 6** | |
| 16 | உமது பள்ளியில் நீவிர் ஏற்படுத்த விரும்பும் மாற்றங்களைப் பற்றி விவரித்து எழுதுக. | 48 - 50 |
| 17 | உன் குடும்பத்தில் ஏற்படவிருந்த ஒரு விபரீதத்தை நீ எவ்வாறு பொறுப்புடன் இருந்து சமாளித்தாய் என்பதையும், அதைச் சமாளிக்கும்போது நீ எதிர்நோக்கிய சவால்களையும் விவரித்து எழுதுக. | 51 - 53 |
| | | 54 - 55 |


**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

| | | |
|---|---|---|
| 18 | வாழ்க்கையில் ஒருவரை முன்னேறச் செய்வது கல்வியே - இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்வாயா? (ஏற்றுக்கொள்கிறேன் என்ற அடிப்படையில் அமைந்த கருத்துகள்) | |
| | **தொகுதி 7** | |
| 19 | நூல் வாசிப்பதன் அவசியத்தைப் பற்றியும் அதை மாணவர்களிடம் வளர்ப்பதற்கான வழிவகைகளையும் விளக்கி எழுதுக. | 56 - 58 |
| 20 | உமது ஆசிரியர் உம்மீது வைத்த நம்பிக்கையால் உம்மிடமிருந்த திறமை வெளிப்பட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது நம்பிக்கையைப் பொய்யாக்காமல் உம்மை நிரூபித்துக் கொண்ட அனுபவத்தை விளக்கி எழுதுக. | 59 - 61 |
| 21 | நல்ல நண்பர்களின் அவசியத்தையும், அவர்களுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளும் வழிவகைகளையும் விவரித்து எழுதுக. | 62 - 64 |
| | **தொகுதி 8** | |
| 22 | நீவிர் போற்றும் ஒருவருடைய நற்பண்புகளையும், அவர் செய்த நற்செயல்களையும் விளக்கி எழுதுக. | 64 – 65 |
| 23 | நீ இனிமேல் சந்திக்கவே கூடாது என்று முடிவெடுத்திருந்த நண்பர் ஒருவரைப் பல வருடங்களுக்குப் பின் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவரை ஏன் சந்திக்கக் கூடாது என்று நினைத்தாய் என்பதையும், அவரை மீண்டும் சந்தித்த போது உனக்கு ஏற்பட்ட மனநிலையையும், பாதிப்புகளையும் விளக்கி எழுதுக. | 66 – 68 |
| 24 | நீ பெருவிரைவுப் போக்குவரத்து இரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவம் உன்னை வருத்தமடையச் செய்தது. அது என்ன சம்பவம் என்றும், அது உன்னை வருத்தமடையச் செய்ததற்கான காரணங்களையும் விவரித்து எழுதுக. | 69 – 70 |
| | **தொகுதி 9** | |
| 25 | ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் அவசியத்தைப் பற்றியும், அவற்றைக் கடைப்பிடிப்பதற்கான வழிமுறைகளையும் எழுதுக. | 71 – 73 |
| 26 | உனக்கு ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவத்தையும், அதன்மூலம் நீ கற்றுக்கொண்ட படிப்பினையையும் விளக்கி எழுதுக. | 74 – 75 |
| 27 | உன் நீண்ட நாள் பழக்கமொன்று மாறுவதற்குக் காரணமாக அமைந்த சம்பவத்தையும், அதன்மூலம் நீ கண்ட மாற்றத்தையும் விவரித்து எழுதுக. | 76 – 77 |
| | | |


**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

| | | |
|---|---|---|
| | **தொகுதி 10** | |
| 28 | நண்பர்களின் செல்வாக்கு ஒருவரது வாழ்வில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்னும் கருத்தை நீ ஏற்றுக் கொள்கிறாயா? ஏன்? | 78 – 80 |
| 29 | நீ செய்யாத ஒரு குற்றத்திற்காக உன் மீது பழி சுமத்தப்பட்டது. அது எவ்வாறு நடந்தது என்றும், அதன்மூலம் நீ எவ்வாறு பாதிக்கப்பட்டாய் என்றும் விவரித்து எழுதுக. | 81 – 83 |
| 30 | "தோல்வியே வெற்றிக்கு முதல் படி" என்பதை உணர்ந்து நீ வாழ்வில் வெற்றி கண்ட சம்பவத்தையும், அதன்மூலம் நீ பெற்ற அனுபவத்தையும் விளக்கி எழுதுக. | 84 – 85 |
| | **தொகுதி 11** | |
| 31 | மாணவர்களாகிய நீங்கள் உங்கள் குடும்பத்தின் பாரத்தை எவ்வாறு குறைக்கலாம்? | 86 – 88 |
| 32 | காலத்தின் அருமையைப் பற்றி உனக்கு உணர்த்திய ஒரு சம்பவத்தைப் பற்றியும், அதன்மூலம் நீ கற்றுக்கொண்ட பாடத்தைப் பற்றியும் விவரித்து எழுதுக. | 89 – 91 |
| 33 | இன்றைய இளையர்கள் எதிர்நோக்கும் சவால்களையும், அவற்றை எவ்வாறு அவர்கள் சமாளிக்கலாம் என்பதனையும் விளக்கி எழுதுக. | 92 – 93 |
| | **தொகுதி 12** | |
| 34 | இளைஞர்கள் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் மதிப்பதில்லை என்ற கருத்தை விவரித்து எழுதவும். | 94 – 96 |
| 35 | இப்படித்தான் முடியும் என்று நீ நினைத்திருந்த ஒரு சம்பவம் நீ எதிர்பாராத விதத்தில் முடிந்தது. அது என்ன சம்பவம் என்றும், அது நீ எதிர்பார்த்த விதத்தில் முடியாத காரணத்தையும் விவரித்து எழுதுக. | 97 – 99 |
| 36 | "சிங்கப்பூர் வாழ்வதற்கேற்ற வளமிக்க நாடு" - இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்? | 100 - 101 |
| | **தொகுதி 13** | |


**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

| | | |
|---|---|---|
| 37 | சாதிக்க இயலாதது எதுவுமில்லை என்று உம்முடைய நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்த சம்பவம் ஒன்றினை விளக்கி எழுதுக. | 102 – 104 |
| 38 | உனக்கு விருப்பமில்லாத செயல் ஒன்றினைச் செய்யும் கட்டாயத்திற்கு நீ ஆளாக்கப்படுகிறாய். அச்சம்பவம் எவ்வாறு நடந்தது என்றும், அது உன்னை எவ்வகையில் பாதித்தது என்றும் விவரித்து எழுதுக. | 105 – 107 |
| 39 | சிங்கப்பூரர்களில் பெரும்பாலோர் வெளிநாடுகளில் குடியேற விரும்புவதில்லை - கருத்துரைக்க. | 108 – 109 |
| | **தொகுதி 14** | |
| 40 | நீ மிகவும் விரும்பும் ஒரு தலைவர் பற்றியும் அவர் உன்னைக் கவர்ந்த காரணத்தையும் விவரித்து எழுதுக. (லீ குவான் இயூ) | 110 – 111 |
| 41 | விளையாட்டு மைதானத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தால் உன் மனம் வருத்தமடைந்தது. அது என்ன சம்பவம் என்றும், அது உன்னை வருத்தமடையச் செய்ததற்கான காரணத்தையும் விவரித்து எழுதுக. | 112 – 114 |
| 42 | உதவும் மனப்பான்மையை எவ்வாறு சிங்கப்பூரர்களிடையே வளர்க்கலாம் என்பதற்கான ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் விளக்கி எழுதுக. | 115 – 116 |
| | **தொகுதி 15** | |
| 43 | நட்பின் சிறப்பை உனக்கு உணர வைத்த ஒரு சம்பவம் பற்றி விளக்கி எழுதவும். | 117 – 119 |
| 44 | வாய்ப்புக் கிடைத்தபோது நீ அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறியதால் உன் முன்னேற்றம் தடைப்பட்டுப் போனது. அது எவ்வாறு நடந்தது என்பதையும், அதன் மூலம் நீ தெரிந்துகொண்ட உண்மைகளையும் விவரித்து எழுதுக. | 120 – 122 |
| 45 | சிங்கப்பூரர்கள் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள் - கருத்துரைக்க. | 123 – 124 |
| | **தொகுதி 16** | |


**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

| | | |
|---|---|---|
| 46 | விளையாட்டுத்தனமான ஒரு செயல் விபரீதத்தில் முடிந்தது. அந்தச் சம்பவத்தை விவரித்து எழுதுக. | 125 – 127 |
| 47 | இக்கால இளைஞர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது. நண்பர்களின் தகாத சேர்க்கையும் ஆடம்பர வாழ்கைமுறையுமே என்ற கருத்தை நீ ஏற்றுக் கொள்வாயா? ஏன்? | 128 – 130 |
| 48 | துணைப்பாட வகுப்புகளினால் ஏற்படும் நன்மைத் தீமைகளைப் பற்றி விளக்கி எழுதுக. | 131 – 132 |
| | **தொகுதி 17** | |
| 49 | மாணவர்களிடையே சமூக சேவையை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்பதை விவரித்து எழுதுக. | 133 – 135 |
| 50 | தண்ணீர் சேமிப்பின் அவசியத்தையும், அதைப் பற்றிச் சிங்கப்பூரர்களுக்கு வலியுறுத்த நீ கூறும் வழிவகைகளையும் விளக்கி எழுதுக. | 136 – 137 |
| 51 | உன்னுடைய தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வழி செய்த ஒரு சம்பவத்தை விளக்கி எழுதுக. | 138 – 139 |
| | **தொகுதி 18** | |
| 52 | உன் குடும்பத்தார் நட்புணர்வோடு பழகுவதில்லை என்றும், தம்முடைய உணர்வுகளை மதித்து நடப்பதில்லை என்றும் உன் அண்டைவீட்டார் கருதினர். ஆனால் நீயும் உன் குடும்பத்தினரும் செய்த செயல் ஒன்று அவருடைய எண்ணத்தை மாற்றியது. நீயும் உன் குடும்பத்தாரும் என்ன செய்தீர்கள் என்பதனையும், அதிலிருந்து நீ பெற்ற படிப்பினையையும் விவரித்து எழுதவும். | 140 – 141 |
| 53 | இனநல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தையும், அதை சிங்கப்பூரர்களிடம் வளர்ப்பதற்கு நீ கூறும் சில ஆலோசனைகளையும் விளக்கி எழுதுக. | 142 – 144 |
| 54 | விடாமுயற்சியே வெற்றிக்கு வழி என்பதை உனக்கு உணர்த்திய அறிஞர் ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றியும், அது உனக்குக் கற்றுக் கொடுத்த பாடத்தையும் விளக்கி எழுதுக. | 145 – 146 |
| | **தொகுதி 19** | |


**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

| | | |
|---|---|---|
| 57 | உன் வகுப்பில் அயல்நாட்டு மாணவன் ஒருவன் புதிதாக வந்து சேர்கிறான். வகுப்பில் இருக்கும் மற்ற மாணவர்கள் அவன் பேசுவதைக் கிண்டல் செய்து அவனை மனவருத்தம் அடையச் செய்கின்றனர். இதனைக் கண்ட நீ, அயல்நாட்டு மாணவனுக்கு ஆறுதல் கூறுவதோடு, மற்ற மாணவர்கள் தங்கள் தவற்றை உணரும்படிச் செய்கிறாய். இச்சம்பவத்தை விவரித்து எழுதுவதோடு, அதன்மூலம் நீ மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுத்த படிப்பினையையும் எழுதுக. | 153 – 154 |
| | **தொகுதி 20** | |
| 58 | நம் நாட்டில் கொண்டாடப்படும் விழாக்கள் சிங்கப்பூரர்களிடம் ஒற்றுமையையும் பிணைப்பையும் ஏற்படுத்துகின்றன - கருத்துரைக்க. | 155 – 157 |
| 59 | பணிப்பெண்கள் சிங்கப்பூரர்களுக்குச் சுகமா, சுமையா? - கருத்துரைக்க. | 158 – 160 |
| 60 | தொழில்நுட்பம் இக்கால இளையர்களை அதிகச் சோம்பேறிகளாக்கிவிட்டது - கருத்துரைக்க. | 161 – 162 |


**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

# பொருளடக்கம் – மின்னஞ்சல்


| தொகுதி | மின்னஞ்சல் வகை | தலைப்பு | பக்க எண் |
| --- | --- | --- | --- |
| 1 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | புகார் செய்தல் - வினா<br>அறிவுரை கேட்டல் - வினா | 171 – 172<br>173 – 174 |
| 2 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | விமர்சனம் செய்தல் - வினா<br>ஆலோசனை கேட்டல் - வினா | 175 – 176<br>7 – 9 |
| 3 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | அனுமதி கேட்டல் - வினா<br>தகவல் கேட்டல் - வினா | 10 – 11<br>12 – 14 |
| 4 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | விண்ணப்பித்தல் - வினா<br>பகிர்ந்துகொள்ளுதல் - வினா | 15 – 16<br>17 – 19 |
| 5 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | மன்னிப்புக் கேட்டல் - வினா<br>பரிந்துரைத்தல் - வினா | 20 – 21<br>22 – 24 |
| 6 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | தகவல் கேட்டறிதல் - வினா<br>தகவல் அறிவித்தல் - வினா | 25 – 26<br>27 – 29 |
| 7 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | பரிந்துரைத்தல் - வினா<br>பாராட்டு தெரிவித்தல் - வினா | 30 – 31<br>32 – 34 |
| 8 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | பாராட்டு தெரிவித்தல் - வினா<br>நன்றி தெரிவித்தல் - வினா | 35 – 36<br>37 – 39 |
| 9 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | ஆலோசனை கூறுதல் - வினா<br>மன்னிப்புக் கேட்டல் - வினா | 40 – 41<br>42 – 44 |
| 10 | a. அலுவலக மின்னஞ்சல்<br>b. உறவுமுறை மின்னஞ்சல் | முறையிடுதல் - வினா<br>விளக்கம் கேட்டல் - வினா | 45 – 46<br>47 – 49 |
| 11 | விடைத்தாள்கள் | அலுவலக மின்னஞ்சல் - 1a to 10a<br>உறவுமுறை மின்னஞ்சல் - 1b to 10b | |


**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

# தொகுதி 3

# Model Compo - மாதிரிக் கட்டுரை

### 7. ஒரு மாணவர் வாழ்க்கையில் வெற்றியடையத் தேவையான பண்புகள் யாவை என்பதை விளக்கி எழுதுக.

'**நீராட்டில்** மனித வாழ்க்கை தொடங்குகின்றது. நீராட்டில் மனிதவாழ்க்கை முடிகின்றது.'

இடையில், பாராட்டு அவனுக்கு இல்லையென்றால் பாவி மனிதன் அவன் ஏன் பிறந்தான்?'
என்று கவிஞர் கண்ணதாசன் மனித வாழ்வின் இலக்கு பற்றித் தமது கவிதையில் கூறுவார். '<u>பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம்</u>' என்றில்லாமல் 'சிறந்தோம்' என்று வாழ்வதே மனித வாழ்வின் குறிக்கோள் ஆகும். உலகில் எத்தனையோ மனிதர்கள் பிறக்கிறார்கள்; எத்தனையோ மனிதர்கள் இறக்கிறார்கள். ஆனால், அத்தனை மனிதர்களும் வெற்றி பெற்ற மனிதர்களாக வாழ்ந்ததில்லை. **அகிலத்தில்** நல்ல மனிதனாக வாழ்பவன் வானகத்தில் உள்ள தெய்வத்தின் வரிசையில் வைக்கப்படுவான் என்றார் வள்ளுவர்.

'<u>கனவு காணுங்கள். பின்னர், அந்தக் கனவுகளை, எண்ணங்களாக ஆக்கி அவற்றைச் செயல்படுத்த முனையுங்கள். அப்போதுதான் நீங்கள் நினைத்த இலக்கை அடைய முடியும்</u>' என்று மாணவர்களுக்கு **அறைகூவல்** விடுத்தார் டாக்டர் அப்துல்கலாம். '<u>**பழுதுபோய்** ஒழிந்தன நாட்கள்</u>' என்றில்லாமல், ஒவ்வொருநாளும் பயனுற வாழ்வதே மனித வாழ்வின் சிறப்பாகும். வாழ்க்கையில் நாம் எல்லோருமே வெற்றியை விரும்புகின்றோம். ஆனால், பெரும்பாலோர் அதை அடைவதற்கு எவ்வித முயற்சியும் செய்வதில்லை. ஏனென்றால், மந்திரத்தால் மாங்காய் விழுந்துவிடும் என்னும் குருட்டு நம்பிக்கை அவர்களுக்கு!

இளமைப் பருவம் நமக்கு இனிய பருவம். இந்தப் பருவத்தில் நாம் திசை மாறிச் சென்றுவிட இன்று எத்தனையோ புறச்சூழல்கள் நமது வாழ்வை அழிக்கக் காத்துக் கிடப்பதால் நாம் விளக்கில் விழும் விட்டில் பூச்சிகளைப் போல நம்மை அழித்துக் கொள்ளக்கூடாது. அதிலும், மாணவப்பருவம் நமக்கு மிக முக்கியமானது. இப்பருவம்தான் நமக்கு எதிர்கால வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகின்றது. எனவே, இப்பருவத்தை வீணாக்காது கடமையும் கண்ணியமும் கொண்டு வாழ்க்கையில் வெற்றியடையத் தேவையான பண்புகளைக் கைக்கொள்ள வேண்டும். அப்பண்புகள் மூலம் வாழ்வில் வெற்றியடைந்து கலங்கரை விளக்காய் ஒளி வீச வேண்டும்.

வாழ்க்கையின் உயரத்திற்கு மாணவர்கள் செல்வதற்கு முதலில், 'திட்டமிடுதல்' (Planning) என்னும் பண்பு அவசியமானது என்பதை அவர்கள் உணர வேண்டும். '<u>எப்போதும் எனக்கு வேலை இருக்கிறது என்று சொல்பவர்கள் திட்டமிடத் தெரியாதவர்கள்</u>' என, ஓர் அறிஞர் கூறுகின்றார். அந்த வேலையிலும், அதனதன் நேரத்தில் தெளிவாகத் திட்டமிட்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்வதுதான் வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படை. மாணவர்களுக்குக் கல்வியும், கல்வியின் தேர்ச்சியுமே இப்போது முக்கிய இலக்கு. மாணவர்கள் பலர் திட்டமிட்டு நேரம் ஒதுக்கி எல்லாப் பாடங்களையும் படிப்பதில்லை. சில சமயம் ஓரிரு பாடங்களைப் படித்தும், பல சமயம் எதனையும் தொடர்ந்து படிக்காமலும் இருந்து விடுகின்றனர். அதனால்தான், அவர்கள் தோல்வியின் **விளிம்புவரை** சென்று விடுகின்றனர். எனவே, பாடங்களைத் திட்டமிட்டுத் தேர்வுக்கு முறையாகப் படித்தலும், அதற்குரிய நேரங்களை ஒதுக்குதலும் மிகவும் அவசியம். இந்தத் திட்டமிடுதல் பயிற்சி அவர்கள்

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

பெரியவர்கள் ஆனதும் எதனை, எங்கு, எப்படிச் செய்யலாம், வெற்றி பெறலாம் என்னும் வழிமுறைகளில் கைத்தேர்ந்தவர்களாக்கி வெற்றியின் சிகரத்திற்கு அழைத்துச் செல்லும் என்பது உறுதி.

மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெற 'உழைப்பு' என்னும் பண்பு மிகவும் அவசியமாகின்றது.

**மடியை** மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்

என்னும் குறளில், தாம் பிறந்த குடும்பத்தை நல்ல குடும்பமாக உயர்த்த வேண்டும் என விரும்புவோர், சோம்பலை ஒழித்து உழைக்க முயல வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். எதனையும் நாளை செய்யலாம் என்பது இன்று மாணவர்கள் பலரின் '**தாரகமந்திரமாக**' உள்ளது. இது மிகவும் தவறு. எதனையும் ஆறப்போடாமல் அன்றன்றைய பாடங்களை, வேலைகளை அன்றன்றே செய்தால் ஆண்டிறுதியில் அல்லல்படாமல் அமைதியான முறையில் தேர்வுகளை எழுதி, அதிக மதிப்பெண்கள் பெறலாம். இந்தத் தளராத உழைப்பு அவர்களின் எதிர்கால வாழ்க்கையை ஒளிமயமாக்கும். '<u>உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ</u>'?

'தன்னம்பிக்கை' என்னும் பண்பு மாணவர்களுக்கு மிகவும் அவசியமான பண்பாகும். செய்யும் காரியங்களில் தோல்வி ஏற்பட்டால் மாணவர்கள் துவண்டு விடுகின்றனர். <u>'வெற்றி வேண்டுமா, போட்டுப் பாரடா எதிர்நீச்சல்! சரிதான் போடா, தலைவிதி என்பது வெறும் கூச்சல்! எண்ணித் துணிந்தால் இங்கு என்ன நடக்காதது? கொஞ்சம் முயன்றால் இங்கு எது கிடைக்காது?'</u> என்னும் திரைப்பாடல் வரிகள், தன்னம்பிக்கையை மாணவர்க்கு அள்ளி அள்ளி ஊட்டும் சிறந்த வரிகள் ஆகும். வாழ்க்கை என்பது தடை ஓட்டம் போன்றது. அங்கு தோல்வி என்னும் தடைகள் வரத்தான் செய்யும். அந்தத் தடைகளைத் தாண்டித் தன்னம்பிக்கையுடன் ஓடுபவன்தான் வெற்றி அடைவான். எனவே, மாணவர்கள் தோல்வியைக் கண்டு மிரளாமல் தன்னம்பிக்கையுடனும், எதுவும் நம்மால் முடியும் என்னும் திடமான மனத்துடனும் முயலவேண்டும். இந்த முயற்சி அவர்களை எதிர்கால வாழ்வில் மாபெரும் வெற்றிக்கு அழைத்துச் செல்லும் என்பது உறுதி.

'<u>கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு</u>' என்ற பழமொழியை நாம் நம் பாலர் பருவத்தில் கற்றிருப்போம். இப்பழமொழி கல்விக்கு எல்லையே இல்லை என்னும் உண்மையை நமக்கு உணர்த்துகிறது. அதனுடன், நாம் வாழும் இந்தக் காலம் சவால்களும் போட்டிகளும் நிறைந்த காலமாக விளங்குகின்றது. போட்டித்திறன்களில் வெல்பவர்கள் மட்டுமே வாழ்க்கைப் பயணத்தில் வெல்ல முடியும், எனவே, மாணவர்கள் தாங்கள் கற்ற கல்வியும், பெற்ற திறன்களும் போதும் என்று **வாளா** இருந்து விடக்கூடாது. 'வாழ்நாள் கல்வி' என்னும் சிங்கப்பூரின் கொள்கைக்கு ஏற்ப, மாறிவரும் சூழலுக்கேற்ப, மாணவர்கள் மேலும்மேலும் புதிதாகக் கற்க வேண்டும். சலிப்பின்றிப் புதிய திறன்களைக் கற்று, அதற்கேற்பத் தங்களைத் தயார்செய்து கொள்ள வேண்டும். இன்றைய தொழில்நுட்பம் நாளை இருப்பதில்லை. அப்படியிருக்கும்போது மாணவர்கள் புதிய விஷயங்களைப் படித்து, தங்களை ஒவ்வொரு நாளும் மேம்படுத்திக்கொண்டால்தான் காலத்திற்கு ஏற்ற மனிதர்களாக அவர்களால் வாழ முடியும், வாழ்க்கையில் உயர்நிலையை அடைய முடியும்.

'<u>நீ போகலாம் என்பவன் எஜமான், வா போகலாம் என்பவன் தலைவன்</u>' என்கிறது அண்மைய பாடலொன்று. ஆம், தலைமைத்துவப் பண்பு மாணவர்களின் வெற்றிக்குத் தலையாய் இருக்கும் பண்புகளில் ஒன்றாகும். அதை ஒவ்வொரு மாணவரும் பெற்றிருப்பது அவசியம் என்பதை உணர்ந்து தொடக்கப் பள்ளியிலிருந்தே மாணவர்களுக்கு இப்பண்பினைப் பல்வேறு நடவடிக்கைகளிலும், பொறுப்புகளிலும் **புகுத்துகிறது** நமது கல்வி அமைச்சு. மாணவர் தலைவர், சட்டாம்பிள்ளை, குழுத்தலைவர், இணைப்பாட நடவடிக்கைகளில் முக்கியப் பொறுப்பாளர் போன்ற பதவிகளை மாணவர்கள் ஏற்கும்போது அவர்கள் மற்றவர்களை வழிநடத்தி, அவர்களையும் பொறுப்புள்ள தலைவர்களாக உருவாக்கும் திறனைக் கற்கிறார்கள்.

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

தங்கள் சக மாணவர்களுக்கு நல்ல முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள். தலைமைத்துவத்தில் இருக்கும் ஒருவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும், அவரிடம் மற்றவர்கள் எவற்றையெல்லாம் எதிர்பார்ப்பார்கள் என்பதை மாணவர்கள் கற்று, உள்வாங்கிக்கொண்டு அதன்வழி நடக்கிறார்கள். இப் பண்புநலன் அவர்கள் பிற்காலத்தில் பணிபுரியும்போது அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்தி, எப்பொறுப்பினையும் தயக்கமின்றி ஏற்பதற்கு அவர்களுக்குத் தோள்கொடுக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

'வெற்றி என்பது எட்டாத கனியன்று, அதைப் பார்த்து ஏங்குவதற்கு.' அது கிடைக்கக்கூடிய ஒன்றுதான். ஆனால், அது கிட்ட வேண்டுமென்றால் அதற்குத் தேவையான பண்புகளை மாணவர்களாகிய நாம் பெற்றிருக்க வேண்டும். 'படித்தவனைவிடப் பண்புள்ளவனையே இந்த உலகம் போற்றும்' என்பது பொன்மொழி. இந்தப் பொன்மொழிக்கேற்ப வாழ்க்கைக்கு வளமூட்டும் பண்புகளைப் பெற்றிருப்பவன் எந்நாளும் துவண்டுபோகமாட்டான். அப்பண்புகளை நாம் பெற்றுவிட்டால் மாணவர் பருவத்தில் மட்டுமல்ல, என்றுமே வெற்றி நம் பக்கம்தான்!

**அருஞ்சொற்பொருள்**

| | |
|---|---|
| நீராட்டில் | குளிப்பாட்டுதலில் |
| அகிலத்தில் | உலகத்தில் |
| அறைகூவல் | பொது அழைப்பு |
| பழுதுபோய் | வீணாகி |
| விளிம்புவரை | இறுதிவரை |
| மடியை | சோம்பலை |
| தாரகமந்திரமாக | முக்கியச் சுலோகமாக |
| வாளா | ஒன்றும் செய்யாமல் |
| புகுத்துகிறது | செலுத்துகிறது |

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

# பயிற்சி வினா 8 மற்றும் 9

கீழே உள்ள மனவரைபட குறிப்புக்கட்டுரையையும் (Mindmap Compo), உதவிக் குறிப்புக்கட்டுரையையும் (Hint's Compo) உதவியாக பயன்படுத்தி, கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விக்கு நீ கட்டுரை எழுதவும்.

8. **இக்காலத் தகவல் தொழில்நுட்பத்தால் ஏற்படும் நன்மை, தீமைகளை விளக்கி எழுதுக.**

| **முன்னுரை** | **விளக்கம்** |
|---|---|
| | • தகவல் தொழில்நுட்ப **யுகம்**<br>• நாளுக்கு நாள் அதிமுன்னேற்றம்<br>• வாழ்க்கையைச் சுலபமாக்குகிறது<br>• கணினி இல்லாத வாழ்க்கைச்சுழல் திரும்பாது<br>• ஆதிக்கம் செய்கிறது<br>• எல்லாரும் கற்றுக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டுவிட்டது |
| **கருத்து 1** | **விரிவாக்கம்** |
| நேரத்தை மிச்சப்படுத்தி விரைவாகச் செயல்பட முடியும் | • அமர்ந்த இடத்திலேயே **அலுவல்**களைச் செய்து முடிக்கலாம்<br>• அதிக அலைச்சலுக்கு இடமில்லை<br>• தகவல்களை உடனுக்குடன் பெற முடிகிறது<br>• மின்னஞ்சல், **குறுஞ்செய்தி** வழி உடனுக்குடன் பதிலை எதிர்பார்க்கலாம்<br>• இணையம்வழிப் பொருள்கள், உணவுவகைகளை வீட்டிற்குக் கொண்டு வரலாம் |
| **கருத்து 2** | **விரிவாக்கம்** |
| அதிகப் பாதுகாப்பு / வசதி நிறைந்த வாழ்க்கைச் சூழலை எதிர்பார்க்கலாம் | • செய்யும் செயல்களை **மறைச்சொல்** மூலம் காத்துக்கொள்ளலாம்<br>• **தானியங்கி**ப் பணம் எடுக்கும் இயந்திரங்கள் மூலம் எந்நேரமும் பணம் எடுக்கலாம்<br>• **கண்காணிப்புப் புகைப்படக் கருவிகள்** பொருத்தப்பட்ட வீடமைப்பு வட்டாரங்கள், கடைத்தொகுதிகள் மற்றும் பல<br>• வீடுகளில் பொருத்தப்படும் பாதுகாப்பு இயந்திரங்கள் |

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

| | |
|---|---|
| | • நீண்ட வரிசைகளைத் தவிர்க்கப் பேரங்காடிகளில் சொந்தமாகப் பணம்கட்டிக்கொள்ளும் வசதி<br>• திறன் பேசிகள் (smartphones) |
| **கருத்து 3** | **விரிவாக்கம்** |
| இணையம்மூலம் ஏற்படும் ஆபத்துகள் | • **சமூக வலைத்தள**ங்களின் தாக்கம்<br>• இளையர்களால் அதிகமாக ஈர்க்கப்படுதல்<br>• இளையர்கள் இணைய உரையாடல்களில் அதிகமாக ஈடுபடுதல் - அதனால் ஏற்படும் ஆபத்து<br>• இணையத்தின் மூலம் வாங்கிய பொருளைத் திரும்பக் கொடுக்க முடியாது 100% **நம்பகத்தன்மை** இல்லை |
| **கருத்து 4** | **விரிவாக்கம்** |
| உடல் நோவு / சோம்பல் / வேலை பாதிப்பு | • முதுகு வலி/கண் கோளாறுகள்<br>• உடற்பயிற்சி இல்லை<br>• மனிதத் தொடர்பு குறைதல்<br>• வேலை வாய்ப்புகள் குறைதல்/வேலை நீக்கம்<br>• மறையும் பணிகள்<br>(தபால்காரர், தந்தி அனுப்புபவர், பேருந்து நடத்துநர்) |
| முடிவுரை | • தகவல் தொழில்நுட்பம் - வாழ்க்கைக்கு இன்றியமையாதது<br>• குடும்பப் பிணைப்பு குறைகிறது<br>• இரண்டுக்கும் வகைசெய்தல் அவசியம்<br>• பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும் |

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள்:**

- எங்கும் கணினி எதிலும் கணினி
- பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்
- கணினியைவிட மனித மூளை சக்தி வாய்ந்தது
- தகவல்கள் கிடைக்கும் வழி பெருகிவிட்டது, ஆனால் அவற்றை ஆராயும் வழி குறைந்துவிட்டது
- மின்னஞ்சல் விண்ணுக்கும் செல்லக்கூடிய காலம் தொலைவில் இல்லை
- பழையன **கழிதலும்** புதியன புகுதலும்
- காலத்திற்கேற்ற **கோலம்**
- ஊரும் பேரும் தெரியாதவர்கள்
- பசுத்தோல் போர்த்திய புலி
- மின்னுவதெல்லாம் பொன்னல்ல

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

- காலம் மாறுது கருத்தும் மாறுது நாமும் மாற வேண்டும்

**<u>அருஞ்சொற்பொருள்</u>**

| | |
|---|---|
| யுகம் | நீண்ட காலம் |
| அலுவல் | வேலை |
| குறுஞ்செய்தி | சிறிய செய்தி (sms) |
| மறைசொல் | மறைந்திருக்கும் சொல் (password) |
| தானியங்கி | சொந்தமாகச் செயல்படும் |
| கண்காணிப்புப் புகைப்படக் கருவிகள் | Surveillance camera |
| சமூக வலைத்தளம் | இணையத்தில் மக்களை இணைக்கும் வலைப்பக்கங்கள் (social network) |
| நம்பகத்தன்மை | நம்பிக்கை |
| கழிதலும் | நீக்குதலும் |
| கோலம் | வேடம் |

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

9. **தொலைக்காட்சியில் நீ விரும்பிப் பார்த்த ஒரு நிகழ்ச்சியும், அது உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக.**

**முன்னுரை**

- சிங்கப்பூரில் தொலைக்காட்சியின் தோற்றம்
- வசந்தம் ஒளிவழியின் தொடக்கம்
- வசந்தம் ஒளிவழியில் இடம்பெறும் நிகழ்ச்சிகளைப் பற்றி சிறு **தொகுப்பு**
  (எ. கா - தகவல் நிகழ்ச்சிகள், சமையல் நிகழ்ச்சிகள், நாடகங்கள், போட்டி நிகழ்ச்சி)
- தகவல் சாதனங்களில் இணையத்திற்கு அடுத்ததாக இருக்கிறது

**இடையுரை**

- உன்னைக் கவர்ந்த ஒரு நிகழ்ச்சி
  (எ.கா - **உள்ளூர்** நாடகங்கள் - **கானல்**, குடும்பம் யுனைட்டட், வேட்டை, வெற்றி தகவல் நிகழ்ச்சிகள் -
  எதிரொளி, இமயத்தை நோக்கி, புதிய **அரங்கம்** போட்டி நிகழ்ச்சிகள் - சவால் சிங்கப்பூர், **சதுரங்க**
  வேட்டை, **பரமபதம்**
- பொது அறிவை மேம்படுத்தும் (செய்திகளில் இடம்பெறும் 'இன்றைய தகவல்')
- சிங்கப்பூரின் வரலாறு மற்றும் சிங்கப்பூர் பற்றிய நிறையச் செய்திகளைத் தெரிந்து கொள்ள முடியும்
- விழிப்புணர்வை உண்டாக்கும்
- மொழி வளம் பெருகும் (நாளும் ஒரு சொல்)
- கற்பனை வளத்தை அதிகரிக்கும்
- தமிழில் பேசுவதற்கு அதிக ஆர்வத்தை உண்டாக்கும்
- நல்ல உரையாடல்களை மனத்தில் பதிய வைக்கலாம்
- வாழ்க்கையில் கற்றுக்கொள்ள வேண்டியதை நாடகம் வழி நமக்கு உணர்த்தும்
- நிகழ்ச்சிகளை **வழிநடத்துபவர்**களின் தன்னம்பிக்கை, தைரியம் ஆகியவை நமக்கு ஊக்குவிப்பாக இருக்கும்
- அவர்களின் உடையலங்காரம் கண்களைக் கொள்ளை கொள்ளும்
- நாடகத்தின் **கதையோட்டம்** ஒரு சுவாரசியத்தை ஏற்படுத்தும்
- சிங்கப்பூர் சூழலுக்கேற்ற நாடகங்கள் பாராட்டுக்குரியன
- தகவல் நிகழ்ச்சிகள் நமக்குக் கருத்துப் பெட்டகமாக அமைகின்றன

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

- பள்ளிப் பாடங்களுக்கு உதவும்
- கட்டுரைகளைச் சிறப்பாக எழுதலாம்
- வாய்மொழிப் பாடங்களில் வளமூட்டும் கருத்துகளைப் பேசலாம்
- நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவிடலாம்
- குடும்பத்தோடு இணைந்து தொலைக்காட்சி பார்த்தல்
- நிகழ்ச்சியைப் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாடி, குடும்பப் பிணைப்பை இறுக்கமாக்கலாம்

**முடிவுரை**

- சிங்கப்பூரில் பெரும்பாலானோர் வீட்டில் தொலைக்காட்சி இருக்கிறது
- 24 நான்கு மணி நேரமும் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன
- தேவையான, நல்ல நிகழ்ச்சிகளை மட்டும் பார்க்க வேண்டும்
- நேரத்தைத் தொலைக்காட்சியிலேயே கழிக்கக்கூடாது
- படிப்பிற்கே **முன்னுரிமை** வழங்க வேண்டும்
- நேரத்தை வகுத்துக்கொள்ள வேண்டும்
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் பயன் அடையலாம்

**இனிய தொடர்கள்**

- உலகம் ஒரு நாடக மேடை, இதில் எல்லாரும் நடிகர்கள் – ஷேக்ஸ்பியர்
- தொலைவில் நடப்பதை அருகில் பார்ப்பதே தொலைக்காட்சி
- கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகும்
- **இமைகொட்டாமல்** பார்த்தேன்
- கண்கள் தொலைக்காட்சியை விட்டு நகரா
- அறிவைப் பெருக்கி அறியாமையை நீக்கும்
- படங்கள் ஆயிரம் வார்த்தைகளைப் பேசும்
- கத்தியைக் காய்கறி வெட்டவும் பயன்படுத்தலாம், கொலை செய்யவும் பயன்படுத்தலாம்
- அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு
- தொலைக்காட்சி கைநுனிகளில் இயங்குகிறது (works on a remote controller)

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**

**<u>அருஞ்சொற்பொருள்</u>**

| | |
|---|---|
| தொகுப்பு | பலவற்றை ஒன்றாகச் சேர்ப்பது |
| உள்ளூர் | சொந்த ஊரில் |
| கானல் | பொய் |
| அரங்கம் | மேடை |
| சதுரங்கம் | நான்கு முலைகொண்ட வடிவம் (square) |
| பரமபதம் | ஒரு பாரம்பரிய விளையாட்டு (snake and ladder) |
| வழிநடத்துபவர் | நிகழ்ச்சியைக் கொண்டு செல்பவர் |
| கதையோட்டம் | கதை செல்லும் விதம் |
| முன்னுரிமை | முதல் சலுகை |
| இமைகொட்டாமல் | கண்மூடாமல் |

**Copyrights of Wordsmith Education Group/ Not for Illegal reproduce, copying and circulation**